SRI LANKA
IMMIGRATION AND EMIGRATION

திகதி: 2021-05-13
இலக்கம்: 08

# ஊடக அறிவித்தல்
# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

கொவிட் – 19 தொற்று நோய் காரணமாக குறைந்த அளவு எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டு சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய, அவசர மற்றும் அத்தியவசிய சந்தர்ப்பங்களில் **கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்காக** பத்தரமுல்லை, பிரதான அலுவலகம் திறந்துள்ளதோடு, நடமாட்ட மட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் பிராந்திய அலுவலகங்களுக்குச் செல்ல முடியுமான சேவை அவசியமுள்ள சேவைப் பெறுநர்களுக்காக **கண்டி, வவுனியா, மாத்தறை மற்றும் குருநாகல்** பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கும்.

அவ்வாறே, தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்து வகையான வீசாக்களினதும் செல்லுபடியாகும் காலம் 2021 **மே மாதம் 11 ஆம் திகதி முதல்** 2021 **ஜூலை மாதம் 09ஆம் திகதி வரை** 60 நாட்களால் நீடிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் காலம் கழியும் வீசாக்களுக்கு அக்காலப் பகுதிக்கான வீசாக் கட்டணம் மாத்திரம் அறவிடப்படும் என்பதோடு, எந்தவித தண்டப் பணமும் அறவிடப்படமாட்டாது.

- **சுற்றுலா வீசாக்கள் வைத்திருப்பவர்கள் வீசாக்களை மேலொப்பமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**

அதற்கமைய, சுற்றுலா வீசாக்கள் வைத்திருப்பவர்கள் அந்த வீசாக்களை நீடித்துக்கொள்வதற்கு கட்டணம் செலுத்தல் மற்றும் மேலொப்பமிடல் போன்ற பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக பின்வரும் முறைகளில் ஒரு முறையைப் பயன்படுத்த முடியும்.

1. https://eservices.immigration.gov.lk/vs எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து கட்டணத்தைச் செலுத்தி இணையவழியில்(Online) வீசாக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது,

2. இக்காலப் பகுதியில் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு உத்தேசிக்குமிடத்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தை விமான நிலையத்தில் செலுத்தி வெளியேற முடியும். அல்லது,

3. 2021 ஜூலை மாதம் 09 ஆம் திகதிக்கு முன்னர் பத்தரமுல்லை பிரதான அலுவலகத்திற்கு வருகைத்தந்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தைச் செலுத்தி வீசாவை கடவுச் சீட்டில் மேலொப்பமிட்டுக்கொள்ள முடியும்.

- **வதிவிட வீசாக்கள் வைத்திருப்பவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

2021 மே மாதம் 11 ஆம் திகதி முதல் 2021 ஜூலை மாதம்09 ஆம் திகதி வரையில் வீசாக்களை நீடித்துக்கொள்ள வேண்டியது அனைத்து வதிவிட வீசாக்கள் வைத்திருப்பவர்களுக்கும் ஏற்புடையதாகும். அன்றைய தினத்திற்கு முன்னர் வீசாக்களை நீடித்துக்கொள்வதற்கு கடமை நாட்களில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை 0707101050 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொண்டு 2021 ஜூலை மாதம் 09ஆம் திகதிக்கு முன்னர் பத்தரமுல்லை அலுவலகத்திற்கு வருகைத்தந்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தைச் செலுத்தி வீசாவை மேலொப்பமிட்டுக்கொள்ளல் வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கடமை நாட்களில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 4.30 வரை பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் அல்லது மின்னஞ்சல் ஊடாக ஏற்புடைய பிரிவுகளுடன் தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தயவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

| பிரிவு | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| **பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தின் கடவுச் சீட்டுப் பிரிவு** | 0707101060, 0707101070 |
| **பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தின் குடியுரிமைப் பிரிவு** | 0707101030 |
| **பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தின் வெளிநாட்டு தூதரகப் பிரிவு** | 0115329233, 0115329235 |
| **பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தின் வீசாப் பிரிவு** | 0707101050 |
| **பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தின் துறைமுக மற்றும் விமான நிலையப் பிரிவு** | 0777782505 |
| **மாத்தறை பிராந்திய அலுவலகம்** | 041-5412212, 041-5104444 |
| **வவுனியா பிராந்திய அலுவலகம்** | 025-5676344, 025-5676345 |
| **குருநாகல் பிராந்திய அலுவலகம்** | 037-5550562, 037-5550563 |
| **கண்டி பிராந்திய அலுவலகம்** | 081-5624509, 081-5624470 |
| **பொதுவான அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்கள்** | www.immigration.gov.lk |

**முக்கியமானது:**

தொற்றுநோய்ப் பரவல் காரணமாக**அரசாங்கத்தினால் அவ்வப்போது எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்கள், ஊரடங்குச் சட்டம் அல்லது நடமாட்ட மட்டுப்பாடுகள், சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினரின் தீர்மானங்கள் என்பவற்றுக்கு உட்பட்டுசேவைகள் வழங்கப்படும் என்பதோடு**, அதன் பிரகாரம்சேவை வழங்கும் தீர்மானங்களில் மாற்றங்கள் நிகழலாம் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**